SC.No. 138/2018
PW – 13
13.05.2026
பெயர் : பன்னீர்செல்வம்
த/பெ. :
சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள் 4 பேரையும் 09.05.2014 தேதியில் விசாரித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே இந்த வழக்கை புலன்விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் சாட்சிகளிடம் மறுவாக்குமூலம் பெற்றிருந்ததால் அந்த சாட்சிகளை நான் திரும்ப விசாரிக்கவில்லை. 09.05.2014 தேதியில் சட்டப்பிரிவு மாற்றம் செய்து இந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி தேதியில் நான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்வது தவறு என்று சொன்னாலும் 16.10.2018 தேதியில் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. மருத்துவர் முத்தையா என்பவரிடம் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் எதையும் நான் காண்பித்து கருத்துரை பெறவில்லை. மருத்துவர் முத்தையா எனது விசாரணையில் இந்த வழக்கில் காயம்பட்ட இரு நபர்களும் ஒரே சமயத்தில் தன்னிடம் சிகிச்சைக்காக ஆஜரானதாகவே கூறியுள்ளார். தனித்தனியாக வந்ததாக கூறவில்லை. இந்த வழக்கில் காயம்பட்ட நபர்களுக்காக நுண்கதிர்படம் எதையும் நான் கைப்பற்றவில்லை. நான் சொல்வதுபோல் இந்த வழக்கின் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் ஆவணங்கள் எதையும் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து மட்டும் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் முறையாக விசாரணை எதுவும் மேற்கொள்ளாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/– பன்னீர்செல்வம்

வீடியோ கான்பரன்சிங் மூலம் சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.